# தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்., சென்னை 600 001.

## (விரைவு பணப் பரிவர்த்தனை சேவை – IMPS – IMMEDIATE PAYMENT SERVICES)

### விளக்கக் குறிப்பு:

**1. IMPS என்றால் என்ன ?**

விரைவுப் பணப்பரிவர்த்தனை சேவை (IMPS) என்பது வங்கிகளுக்கு இடையே 24 X 7 அடிப்படையில் வாடிக்கையாளர்கள் பணம் அனுப்ப மற்றும் பெறுவதற்கான ஒரு வசதியாகும்.

**2. IMPS–ல் சேருவது எப்படி ?**

வலைய வங்கியியலுக்குத் (Net Banking) தேவையான விண்ணப்பத்தை கிளையில் அளித்து வலைய வங்கியியல் மற்றும் கைபேசி வங்கியியல் வசதியினை வாடிக்கையாளர் பெற வேண்டும். வலைய வங்கி மற்றும் கைபேசி வங்கியியல் பயன்பாட்டுச் சொல், கடவுச் சொல் ஆகியவை வங்கியால் வழங்கப்படும். பிறகு வாடிக்கையாளர் கைபேசி வங்கியியலை கூகுல் பிளே ஸ்டோரிலிருந்து, வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள எண் கொண்ட கைபேசியில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும் (Download). IMPS, கைபேசி வங்கியியலின் ஒரு பகுதியாக இருக்கும்.

**3. MMID என்றால் என்ன ?**

Mobile Money Identification Number என்பது ஒரு இரகசிய எண்ணாகும். இது வங்கியால் வழங்கப்படும்.

**4. MMID பெறுவது எப்படி ?**

வங்கியில், வலைய வங்கியியல் மற்றும் கைபேசி வங்கியியலுக்கு பதிவு செய்து கைபேசி வங்கியியலை கைபேசியில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். பின்னர் IMPS என்ற சின்னத்தை (menu) கிளிக் செய்து Generate MMID என்ற வசதியின் மூலம் MMID–ஐ பெற இயலும். இந்தக் குறியீட்டு எண்ணை வாடிக்கையாளர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இக்குறியீட்டு எண்ணை மறந்து போகும் நிலையில், புதிய குறியீட்டு எண்ணை பெறவும், அல்லது பழைய குறியீட்டைப் பெறவும், IMPS மெனுவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**5. பயனாளிகளை சேர்ப்பது எப்படி ? (Add Beneficiaries)**

வலைய வங்கியில் மற்றும் கைபேசி வங்கியியலில் சேர்க்கப்பட்ட பயனாளிகளை IMPS–க்கும், உபயோகிக்கலாம். வலைய வங்கியியல் மற்றும் கைபேசி வங்கியியலில் Add Beneficiary என்ற மெனுவில் கேட்கப்படும் விவரங்களைக் கொடுத்து பயனாளிகளைச் சேர்க்க இயலும்.

ஒரு நாளுக்கு இரண்டு பயனாளிகளை மட்டுமே இணைக்க இயலும். பயனாளிகள் இணைக்கப்பட்டு 60 நிமிடங்கள் கழித்து மட்டுமே உபயோகிக்க இயலும்.

**6. பணம் அனுப்புவது எப்படி ?**

அ. Person to Person முறையில் பணம் பெறுபவருடைய MMID மற்றும் கைபேசி எண்., பெயர் ஆகியவற்றின் மூலம் IMPS மூலமாக பணப்பரிவர்த்தனை செய்யலாம்.

ஆ. Person to Account முறையில் பணம் பெறுபவருடைய கணக்கு எண், பெயர் மற்றும் (IFS Code) வங்கி குறியீடுகள் ஆகியவற்றை அளித்து பணப்பரிவர்த்தனை செய்யலாம்.

இ. கணக்கில் பணம் வரவு வைக்கப்பட்டவுடன், அத்தொகையை பயன்படுத்த இயலும்.

**7. IMPS வரம்பு உண்டா ?**

**IMPS** முறையில் ஒரு நாளுக்கு ரூ.15,000 வரை பணம் அனுப்ப இயலும்.

**8. தவறான தகவல்களை கொடுப்பதால் ஏற்படும் விளைவு யாது ?**

பணம் பெறுவதற்கு தவறான தகவல்களை தரப்படுமேயானால் பணப்பரிவர்த்தனை நிராகரிக்கப்படும்.

**9. அனுப்பப்படும் பணம் திரும்பி வருமா ?**

பரிவர்த்தனை செய்யப்படும் தொகையானது, ஏதாவது காரணத்தினால் பெறும் வங்கியினால் திருப்பி அனுப்பப்படும்போது, தொகை மீண்டும் வாடிக்கையாளர் கணக்கில் வரவு வைக்கப்படும். அவ்வாறு இல்லாமல் இருந்தால், NPCI-உடன் கணக்கு நேர் செய்யப்பட்டு (Reconciliation) 7 நாட்களுக்குள் வரவு வைக்கப்படும்.

**10. IMPS பரிவர்த்தனை நேரம் யாது ?**

**IMPS** முறையில் பணம் 24 X 7 அடிப்படையில் அனுப்ப மற்றும் பெற இயலும். கணக்கில் தேவையான தொகை இருப்பு இருக்க வேண்டும்.

**11. IMPS –க்கான கட்டணம் யாது ?**

IMPS வசதி தற்பொழுது கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது. எதிர்காலத்தில் வங்கி, கட்டணம் வசூலிக்கலாம்.

**12. பணம் அனுப்பியதற்கான தகவல் கிடைக்குமா ?**

பணம் அனுப்பியவருக்கும், பணத்தை பெறுவருக்கும் வங்கிகள் தேவையான SMS தகவலை அனுப்பும்.

**13. வேறு கைபேசி எண்ணை பயன்படுத்தலாமா ?**

வங்கிக் கணக்கில் பதிவு செய்த கைபேசி எண்ணை மட்டுமே பயன்படுத்தி பணப்பரிவர்த்தனை செய்ய இயலும்.

-----